## 'பூரணத்துவம் பெற்ற வாழ்வுக்கு . . .'

பருத்தித்துறை, புதன்

"சமுதாயத்தில் சிலர் உடலை வளர்க்கிறார்கள் சிலர் கல்வி விருத்தியில் மட்டும் ஈடுபடுகிறார்கள். ஆனால் பூரணத்துவம் பெற்ற வாழ்க்கைக்கு உடல், உளம், ஆன்மா ஆகிய மூன்றும் அபிவிருத்தியடைய வேண்டியது அவசியம். இக்காரணத்தினாலேயே பாடசாலைகளில் விளையாட்டு, கல்வியின் ஒரு பகுதியாகப் போதிக்கப்படுகிறது. இவ்வடிப்படையிலேயே நமது புதிய கல்வித் திட்டமும் அமைந்துள்ளது"

இவ்வாறு பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் நடந்த பருத்தித்துறை வட்டார விளையாட்டுப் போட்டிக்குத் தலைமை தாங்கிய வட்டாரக் கல்வி அதிகாரி திரு. க. தவராஜா கூறினார்.

இப்போட்டியில் 47 பாடசாலைகள் கலந்துகொண்டன. பருத்தித்துறைப் பொலிஸ் அதிபர் திரு. சிறீ பத்திரான பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

## 'மீண்டும் நியமிக்கவும்'

குருநகர், புதன்

வேலணை மலை நோக்குக் கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளராகக் கடமையாற்றி இரண்டாவது முறையாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ள கூட்டுறவு பரிசோதகர் திரு. இ. யேசுதாசனை மீண்டும் வேலணை மலைநோக்குக் கூட்டுறவுச் சங்கப் பொது முகாமையாளராக நியமிக்குமாறு கூட்டுறவு ஆணையாளரையும் உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக அமைச்சரையும் இப்பகுதிப் பொதுமக்கள் கேட்டுள்ளனர்.

## வல்வை வரியிறுப்பாளர்

இமையாணன், புதன்

வல்வெட்டித்துறை நகரசபைக்கு வரவேண்டிய வரிகளை வரியிறுப்பாளர்கள் துரிதமாகச் செலுத்தி வருவதாக சபைச்செயலாளர் தெரிவித்தார். புதிய திட்டத்தின்கீழ், வரிவசூலிப்பாளர்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதால் வரியிறுப்பாளர்கள் நேரடியாகவே நகரசபை அலுவலகத்திற் வரியைச்செலுத்தி வருகின்றனராம்.

## முதலையால் தாக்கப்பட்டார்

முல்லைத்தீவு, புதன்

குளத்தைக் கடக்கச் சென்றவர் முதலையால் தாக்குண்டார்.

முல்லைத்தீவு கிராமசேவகர் திரு. பி. ஞானேஸ்வரன் தனது ஊரான தண்ணீரூற்றிலுள்ள ஒரு குளத்தைத் தாண்ட முயற்சித்தபோது முதலையொன்றின் வாயில் சிக்கினராம். அவர் இப்பொழுது காயங்களுடன் முல்லைத்தீவு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## நடிகர்களைப் பாராட்ட முடிவு

பருத்தித்துறை, புதன்

ஈழத்தின் தமிழ்த் திரைப்படமாகிய 'குத்துவிளக்கு' நடிக நடிகையருக்கு வாழ்த்துத் தெரிவிக்குமுகமாக அவர்களை ஒரு விருந்துபசாரத்துக்கு அழைத்துப் பாராட்டுவதாக இப்பகுதிப் பாடசாலை அதிபர்களும் ஆசிரியர்களும் தீர்மானித்துள்ளனர்.

சித்திரைப் புத்தாண்டையொட்டி நடக்கவிருக்கும் இவ்விருந்துபசாரம் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறுமெனவும் அறிவிக்கப்படுகிறது.

## சங்கச் செய்திகள்

யாழ்ப்பாணம், வியாழம்.

மக்கள் துறைமுகத் தொழிலாளர் பொதுச் சேவைக் கூட்டுறவுச் சங்க நடப்பு வருட உத்தியோகஸ்தர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: எம். ஜேக்கப், உப தலைவர்- ச. இம்மனுவேல், பொதுக் காரியதரிசி- ஜோசப் அன்ரனி, பொருளாளர்-ஜே. எம். இராசு. ச. அ. இறிஸ்கி, யே. செல்வம், ஞ. தாசன், அ. பிலிப்பு, இ. மணியம் ஆகியோர் நிர்வாக சபை உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

### கி.மு.சங்கம்

மாவிட்டபுரம், புதன்

தையிட்டி கணேஸ்வரி சனசமூக நிலைய கிராம முன்னேற்றச்சங்க வருடாந்தக் கூட்டம் திரு. தி. வல்லிபுரலிங்கம் தலைமையில் நடைபெற்றபோது தெரிவு செய்யப்பட்ட புதிய நிர்வாகிகள் விபரம் வருமாறு!

தலைவர்: க. வில்வலிங்கம், உப தலைவர்- கா. சிவமாசுந்தரம், செயலாளர்- வே. திருவாசகம், உப செயலாளர்- மு. கைலாயபிள்ளை, தனாதிகாரி- கா. தர்மலிங்கம், கணக்குப் பரிசோதகர்- தி. வல்லிபுரலிங்கம்.

### ப.மா.சங்கம்

இலுப்பைக்குளம், புதன்

சாவகச்சேரி முஸ்லிம் மகாவித்தியாலத்தின் பழைய மாணவர் சங்க ஆண்டுப் பொதுக் கூட்டம் அதிபர் ஜனாப் ஏ. கையூம் தலைமையில் நடைபெற்றது. பின்வருவோர் உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

போஷகர்கள்- அதிபர் ஜனாப் ஏ. கையூம், தலைமை ஆசிரியர் ஜனாப் எம். எல். யூசுப்பு. தலைவர்- ஜனாப் எம். பதுறுஸமான், செயலாளர்- ஜனாப் எஸ். அப்துல் மஜீத், உபசெயலாளர்- ஜனாப் எம். புஹாரி, தனாதிகாரி-ஜனாப் யூ. பதுறுதீன்.

### ச.ச.நிலையம்

குரும்பசிட்டி, செவ்வாய்

குரும்பசிட்டி வளர்மதி சனசமூக நிலைய 5வது ஆண்டுக்குரிய புதுவருட உத்தியோகஸ்தர்கள் விபரம் வருமாறு:

தலைவர்: பொ. தங்கராசா, உப தலைவர்: இ. தவராசா, செயலாளர்கள்: மு. திருநாவுக்கரசு, க. ஸ்ரீரெங்கநாதன், பொருளாளர்: த. திருவாகரன், நிர்வாகசபை உறுப்பினர்கள்: வ. இராசரத்தினம், ந. சின்னராசா, ந. யோகராசா, ந. நடராசா, த. கிருஷ்ணபோபால், இ. செல்வராசா.

### சுழிபுரம் கி.மு.ச

சுழிபுரம் கிராம முன்னேற்றச்சங்க நிர்வாகிகள்:

தலைவர்: திரு க. கந்தசுவாமி, உப தலைவர்: திரு க. நாகலிங்கம், காரியதரிசி: ச. சிதம்பரப்பிள்ளை, உப காரியதரிசி: மா. வைத்திலிங்கம், தனாதிகாரி: சி. கந்தையா, பதினாறுபேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

### ஆ.ஆ.சங்கம்

மாவிட்டபுரம் தமிழ் கலவன் பாடசாலை பெற்றோர் ஆசிரியர் சங்க நிர்வாகிகள் விபரம் வருமாறு!

தலைவர்: கா. அருணம்பலம், காரியதரிசி: ஆ. சண்முகரத்தினம், உப காரியதரிசி: கு. குமாரசாமி, பொருளாளர்: வி. வேலுப்பிள்ளை மற்றும் 9 பேர் கொண்ட நிர்வாக சபைக் குழுவும் தெரிவுசெய்யப்பட்டது.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### வியாழன் 2-3-72

(செய்திகள்: காலை 6-30, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

894 மீ அலை 59 மீ

6-15 நாதாஞ்சலி- மங்கள வாத்தியம் 6-20 சைவ நற்சிந்தனை - ஸ்ரீ ஸ்ரீ சுவாமி நாதரூபபிரமானந்த சுவாமிகள். 6-25 இஸ்லாமிய நற்சிந்தனை 6-40 அறிவிப்புகள், 6-50 வாரச்சம்பவம் 7-05 தனிப்பாடல், 7-30 மாகாணச்செய்திகள், 7-35 குரல்வளை, 8-00 இசைவேளை- எஸ். பாலசிங்கம், ஏ. என். நாராயணன் 8-15 இன்னிசை கீதம்.

இரவு 6-10 அறிவிப்புகள், 6-15 ஒடிவிளையாடு பாப்பா, நடத்துபவர் ராஜேஸ்வரி அக்கா 6-30 தானவாத்தியக் கச்சேரி, 7-00 தமிழ்மூலம் சிங்களம், 7-15 சமுகம் புலமும்- சமத்தொழில்நிலையத்தினர் அளிக்கும் நிகழ்ச்சி, 7-30 உலகச் செய்திகள் 7-35 மெல்லிசை வாத்தியக்கோஷ்டி 7-45 ஐக்கியநாடுகள் சித்திரம்- பிரதி தயாரிப்பு சி. சரவணமுத்து 8-00 மன்றில் நிகழ்ச்சி 9-10 அறிவிப்புகள் 9-30 உரையாடல், நடத்துபவர் கலாநிதி வ. கணேசலிங்கம், 10-00 இசை நிகழ்ச்சி, மேனாட்டு இசை.

## இன்றைய பலன்

(மாசி மாதம் 19-ந் திகதி 2-3-72)

மேஷம்: உடன் தொல்லைகள் கவலையைத் தரும். உறவினர்களுடன் பிணக்குகள் தோன்றும். மன்று உஷாராக இருக்கவும்.

ரிஷபம்: அன்புக் காரர்கள் அணைக்கும். அதிர்ஷ்டதேவதையின் பார்வையும் மதியலாம். குருவின் உபதேசம் வாழ்க்கைக்கு வழிகாட்டியாக அமையும்.

மிதுனம்: வெற்றிப்பாதையில் விறுநடை போடுவீர்கள். தொழில் துறையில் புதிய உற்சாகம் பிறக்கும். நன்று தினம்.

கடகம்: கூட்டுவியாபாரத்தில் முன்னேற்றமுண்டு. வெளியூரிலிருந்து திருப்திகரமான செய்தி கிடைக்கும். நிம்மதியான தினம்.

சிம்மம்: மனதில் விரக்தி நிலை தென்படும். உடல் நலமும் பாதிக்கப்படலாம். காசுநடைகளினால் நஷ்டம் ஏற்படும்.

கன்னி: அதிக சிந்தனை அமைதியைக் கெடுக்கும். புதிய கோணத்திலிருந்து தாக்குதல் உருவாகும். விழிப்புடன் இருக்கவும்.

துலாம்: வாழ்க்கையில் கொந்தளிப்பான நிலைமை தென்படும். சிலர் புனைந்துரைகள் கேட்கவும் நேரிடும். மிகவும் அவதானத்துடன் நடந்து கொள்ளவும்.

விருச்சிகம்: சிறிய விடயம் கோபம் பெரிய மோதல்களை ஏற்படுத்தும். எதிரிகளின் சூழ்ச்சிகளும் பலமாக இருக்கும். பொறுமையே வேண்டும்.

தனுசு: அறிவுப் பசிக்கு இன்று தாராளமாக விருந்து கிடைக்கும். ஆராய்ச்சியில் ஆர்வம் பிறக்கும். படித்தவர்கள் ஆதரவுண்டு.

மகரம்: வானம்பாடி போல் கானம் இசைப்பீர். வழியிலும் ஒளி வீசும். முதியவர் ஒருவர் உமக்கு நல்வழி காட்டுவார்.

கும்பம்: பணமுடக்கம் தோன்றும். பட்டமும் உடன் சேரும். மிகையான போக்கினாலே மனதும் பாழாய்ப் போகும்.

மீனம்: உணர்ச்சிவசப்படுவதால் காரியம் தடைப்படலாம். அமைதியுடன் செயலாற்றின் வெற்றி அருகில் உண்டு.

சோதிட கலாநிதி
திருமலை
சு. வேலுப்பிள்ளை


# தலைவலி, நோவுகளைச் சகித்துக் கொண்டு வீணுகச் சங்கடப்பட வேண்டாம்




# டிஸ்பிரின் உட்கொண்டு அதிதுரித நிவாரணம் பெறுங்கள்

**டிஸ்பிரின் அதிதுரித நிவாரணம் தரும்**

தலைவலி, நோவுகளுக்கான மருந்துகள் அதிதுரித நிவாரணம் தர வேண்டும். டிஸ்பிரின், கரையக் கூடிய அஸ்பிரின் கொண்டதாகையால் மிக விரைவாகவும் முற்றாகவும் கரைந்து இரத்தோட்டத்திற் சீக்கிரம் செறிகிறது. இரத்தோட்டத்தில் விரைவாகச் செறிவதால் மிக வேகமாக உடம்பிற் செயலாற்றி உங்களுக்கு அதிதுரித நிவாரணம் தருகிறது.

**எவ்வித பயமுமின்றி டிஸ்பிரின் உட்கொள்ளலாம்**

டிஸ்பிரின் முற்றாகக் கரைவதாகையால், மற்ற மருந்துகள் போல உடம்புக்குப் பாதகமான கரையாத துகள்களை வயிற்றில் விட்டு வைப்பதில்லை. சில புதிய மருந்துகளிற் போல, பாதகமான சேர்பொருள்கள் எதுவும் டிஸ்பிரினிற் கிடையாது. எனவே எவ்வித் பயமுமின்றி டிஸ்பிரின் உட்கொள்ளலாம்.

**டாக்டர்கள் சிபாரிசு செய்வது டிஸ்பிரின்**

உலகமெங்குமுள்ள வைத்திய நிபுணர்கள், அதிதுரிதமான அதிவன்மையான நிவாரணத்துக்கு டிஸ்பிரினைச் சிபாரிசு செய்கிறார்கள். ஏனெனில் அதி சிறந்த வலி நிவாரணிகளில் ஒன்று டிஸ்பிரின் என்பது அவர்களுக்கு அனுபவத்தில் தெரியும்.

தலைவலி, நோவு, சளிசுரம், காய்ச்சல், தடிமல், மாதவிடாய் வலி, வாத நோவுகளிலிருந்து அதிதுரித நிவாரணம் பெற டிஸ்பிரின் பாவியுங்கள்.

2 மாத்திரைகளை நீரிற் கரையவிட்டு அல்லது முழுமையாக ஏதாவது பானத்துடன் உட்கொள்ளுங்கள்.

குழந்தைகளுக்கு: பெட்டியிலுள்ள அளவுப் பிரமாணங்களைப் பாருங்கள்.

P-814,96 — றெக்கிட் அன்ட் கோல்மன் உற்பத்தி

